1975 அக்டோபர் 25]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அப்படியொரு தவறான கருத்து இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் மாற்றவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மேலும் அபிவிருத்தி செய்யும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது நிரந்தரமாகவே நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இந்த மருத்துவமனைகள் இயங்கும் முறையில் எந்தெந்தப் பிரிவுகள் எங்கே இயங்கினால் பொதுமக்களுக்கு அதிக நன்மை என்பதைப் பற்றியும், அவைகள் இயங்குவதற்கு யார் பொறுப்பாக இருப்பது என்பதைப்பற்றியும் அவ்வப்பொழுது மருத்துவக் கல்லூரி இயக்குநர் ஆராய்ச்சி செய்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்கின்ற கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சிறுசிறு மாற்றங்கள் அவ்வப்பொழுது செய்யப்படுகின்றன. greatest utility with the available facility முறையில் கிடைக்கும் வசதிகளைக்கொண்டு அதிக அளவிற்கு நன்மைகள் பயக்கும் முறையில் பிரிவினை செய்வது, பாகுபாடு செய்வது பற்றி அவ்வப்பொழுது மருத்துவத் துறை ஆய்வாளர்களால் ஆலோசனை வழங்கப்பட்டுத்தான் மேற்கொள்ளப்படுகிறது.

### திருவையாற்றிலுள்ள மருந்தகம்

*50 வினா—**திரு. கோ. இளங்கோவன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் வட்டம், திருவையாறு பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள சத்திரம் நிர்வாகத்திலுள்ள மருந்தகத்தினை அரசு மேற்கொள்ளுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**திரு. கோ. இளங்கோவன்:** தலைவரவர்களே, திருவையாற்றைச் சுற்றிலும் உள்ள 25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாழும் மக்கள் இந்த சத்திரம் மருந்தகத்திற்குத்தான் வரவேண்டியிருக்கிறது.

அங்கே பொருளாதார நிலைமை காரணமாகப் பெண் மருத்துவர்கள் இல்லை. உதவியாளர்கள் இல்லை, போதிய படுக்கைகள் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட மருத்துவமனைகள், தஞ்சை மாவட்டத்தில், தமிழ்நாட்டில் இருக்கின்றன என்பதை உணர்ந்து அவைகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அரசாங்கம் மருத்துவமனைகளை 'அக்வேர்' செய்வதில்லை. 'அக்விசிஷன்' செய்வதைப் போன்று செய்யவில்லை. மருத்துவமனைகளை நடத்துபவர்கள் தாங்கள் எந்தக் காரணத்தினால் அதை ஒழுங்காக நடத்த முடியவில்லை என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்து, ஆகவே, அரசாங்கம் அதை மேற்கொள்ள வேண்டுமென்று முறையாக விண்ணப்பித்தால் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை எடுப்பது என்ற திட்டம் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் அப்படிப்பட்ட விண்ணப்பம் வருமானால் அரசாங்கம் எடுக்க முயற்சிக்கலாம். முயற்சிக்கலாம் என்றுதான் சொல்கிறேனே தவிர இது 'அஷ்யூரன்ஸ்' ஆகாது. ஆகவே, பரிசீலனை செய்யக்கூட அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்.

*51 வினா—**திரு. வ. முத்து :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எளச்சிபாளையம் ஒன்றியத்தில், பொதுச் சுகாதார நிலையம் கட்டும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சேலம் மாவட்டம் எளச்சிபாளையம் ஒன்றியத்திற்காக ஆரம்ப சுகாதார நிலையத்தை மாணிக்கம்பாளையம் ஊராட்சியில் அமைக்கும்படி அரசு 18—10—1974-ல் ஆணையிட்டது. இதன்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்காலிகக் கட்டடம் தேர்ந்தெடுக்கப்பட்டு 23—1—1975 முதல் அந்த நிலையம், மாணிக்கம்பாளையத்தில் செயற்பட்டு வருகிறது. நிரந்தரக் கட்டடங்கள் கட்ட 5 ஏக்கர் நிலமும் ரூபாய் பத்தாயிரம் நன்கொடையும் அளிக்க வேண்டும். இந்தத் தொகையும் இடமும் இன்னும் அளிக்கப்படவில்லை.